2019 ஜூலை 15]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளையெல்லாம் வரன்முறைப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குகிற நிலையில் இருக்கிறது. ஆகவே, அதனை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கக்கூடிய அந்த ஆய்வுகளுக்காகத்தான் இரண்டு அரசாணைகள் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. அரசாணைகள் 496, 465 ஆகிய இரண்டிற்குமான கால அவகாசம் முடிந்துவிட்ட காரணத்தினால், கால அவகாச நீட்டிப்பிற்காக கோப்புகள் தற்போது பரிசீலனையில் இருக்கின்றன. அந்த இரண்டு அரசாணைகளையும் மீண்டும் வெளியிடுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அனைத்தையும் வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலனைக்கு எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, அவர் வைத்த கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தந்தது என்று இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். சொன்னதையும் செய்கிற அரசு, சொல்லாததையும் செய்கிற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இன்றைக்கு அவரே ஓர் ஒப்புதல் வாக்குமூலமாகக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவைக்கு எடுத்துவைத்து, வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***41287—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 15 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு தயாராக உள்ளது. அரசின் நிதிநிலைக்கேற்ப சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செஞ்சி வட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் சுமார் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் பத்திரப்பதிவு செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகம், ஏற்கெனவே அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது. பாண்டி–கிருஷ்ணகிரி சாலை விரிவாக்கப் பணிக்கு அலுவலக இடத்தின் ஒரு பகுதி NHAI மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்குண்டான நஷ்டயீட்டுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சத்தியமங்கலத்தில் சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாதம் ஒன்றுக்கு வாடகை சுமார் 7 ஆயிரம் ரூபாய் வீதம், ஆண்டு ஒன்றுக்கு 84 ஆயிரம் ரூபாய் அரசுப் பணம் செலவழிக்கப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான ஓர் இடம் உள்ளது. மேற்கண்ட சத்தியமங்கலம் கிராமத்தில் வசிக்கும் திரு. திருஞானசம்பந்தம் அவர்களின் துணைவியார் திருமதி ரத்தினமாலா என்பவர் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட தானப் பத்திரமாக 2015–ல் சுமார் 3,575 சதுர அடி அளவுள்ள காலி மனையைப் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். எனவே, சத்தியமங்கலம் சார் பதிவாளர்

2019 ஜூலை 15]

அலுவலகம் கட்டுவதற்கு போதிய இடம் உள்ள காரணத்தினால் உடனடியாக சத்தியமங்கலத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தைக் கட்டித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் இயங்கி வந்த சார் பதிவாளர் அலுவலகம் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குத் தேவை என்கிற அடிப்படையில் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் இயங்கி வந்த காரணத்தினால், நிலம் எல்லாம் கையகப்படுத்தி தயார் நிலையில் இருக்கின்ற காரணத்தினால், முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதியில் உள்ளடங்கிய அவலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர், குடிநீர் வசதி மற்றும் பொதுக் கழிப்பிடம், பொதுமக்கள் காத்திருப்போர் அறை, செஞ்சி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர், குடிநீர் வசதி மற்றும் பொதுக் கழிப்பிடம், பொதுமக்கள் காத்திருப்போர் அறை, அனந்தபுரம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு குடிநீர் வசதி, பொதுமக்கள் காத்திருப்போர் அறை, பொதுக் கழிப்பிடம் மற்றும் சுமார் 300 மீட்டர் சிமெண்ட் சாலை அமைத்தல், வளத்தி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு பொதுமக்கள் காத்திருப்போர் அறை மற்றும் வாகனங்கள் நிறுத்த மேற்கூரை அமைத்தல், மயிலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பொதுக் கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அன்றாடம் வந்து செல்லக்கூடிய மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாத விதத்திலே, அவர்களுக்குத் தேவையான வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து, பதிவுத் துறையானது மக்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். பல்வேறு சார் பதிவாளர் அலுவலகங்களில் இருக்கக்கூடிய தேவைகளையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். இது எங்களுடைய துறையின் மூலமாக ஆய்வில் இருக்கின்றது. தேவைப்படக்கூடிய இடங்களிலெல்லாம் அவருடைய பகுதிக்கு வரக்கூடிய மக்களுக்கான வசதி வாய்ப்புகளை செய்து கொடுப்பதற்கு அரசு தயார் நிலையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள்.*

திரு. M.S.R. ராஜவர்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறுநடை தங்கம்தான், எழுச்சிமிகு சிங்கம்தான், இனி கொளுத்திவிட்ட உமிகள்தான் குள்ளநரி கூட்டத்தார் என கொடிபிடித்து இடி இடிக்கும் கொள்கைக் கூட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், இந்த ஆட்சியையும் வழிநடத்தி வருகின்ற சேலத்துச் சிங்கம் எங்கள் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டக் கழகத்தினுடைய வீரத் தளபதி எங்கள் பால் வளத் துறை அமைச்சர் அருமை அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை பகுதிக்குட்பட்ட 200 கிராமங்களின் நீண்ட நாள் கோரிக்கையான சார் பதிவாளர் அலுவலகத்தை அமைத்துத்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் அடிப்படையிலே, சார் பதிவாளர் அலுவலகம் புதிதாகத் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை. காரணம், பரந்து விரிந்திருக்கக்கூடிய மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மஹாராஷ்டிரா போன்ற பெரிய பெரிய மாநிலங்களில்கூட அதிகப்படியாக 365 சார் பதிவாளர் அலுவலகங்கள் என்கின்ற நிலையிலே இருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் மட்டும்தான் 575+3 என்கின்ற நிலையிலே, 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் அடிப்படையிலே, புதிய சார் பதிவாளர் அலுவலகம் தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டேவிசன் தெருவிலே 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சார் பதிவாளர் அலுவலகக் கட்டடத்திலே ஜார்ஜ் டவுன் வட்டார கல்வி அலுவலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. கட்டடம் முழு அளவிலே சிதிலமடைந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த சார் பதிவாளர் அலுவலகத்திற்கும், வட்டாரக் கல்வி அலுவலகத்திற்கும் வந்து செல்கின்ற நிலை இருக்கின்றது. போதிய இடவசதி இல்லாமலும், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதாலும், உடனடியாக போர்க்கால அடிப்படையில், இந்த சார் பதிவாளர் அலுவலகம், வட்டாரக் கல்வி அலுவலகம் ஆகியவற்றை கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தேவைப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைக்கூட வழங்குவதற்குத் தயாராக உள்ளோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடம் கட்டச் சொல்கிறாரா அல்லது பழைய கட்டடத்தைச் சரி செய்து தரச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. ஆகவே, பழைய கட்டடமாக இருந்தால், அதைச் சீர்செய்து தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்; அந்தக் கட்டடம் சீர் செய்யப்படும். அதேசமயத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை தருவதாகச் சொன்னார்கள். அந்த நிதியை ஒதுக்கிக்கொடுத்தாலும், வேகமாக அந்தப் பணியை முடித்துக் கொடுப்பதற்கு அரசு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

ஆவின் பாலகம் அமைத்தல்

***12055—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். முருகுமாறன் கேட்டுகொண்டதற்கிணங்க, சத்தான, சுவையான